**18.11.2025.**

**O.S.No.49/2011**

**பி.வா.சா.1 : சரஸ்வதி**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 7 ஏக்கர். 6.93 ஏக்கர் நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. அய்யாவு பெயரில் எனது அப்பா ராமசாமி மற்றும் அம்மா எழுதி வைத்த கிரய ஒப்பந்த பத்திரத்தை (வா.சா.ஆ.1) நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. எனது அப்பா அம்மா இருவருக்கும் எந்த வங்கியில் வங்கி கணக்கு எண் இருந்தது என்றால் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவாசல் கிளையில் கணக்கு இருந்தது. எனது அப்பா இறந்த பிறகு அவர் கணக்கில் இருந்த தொகை யார் எடுத்தார்கள் என்றால் நான் எடுத்துகொண்டேன். 5 லட்சம் போட்டேன் வட்டி உடன் சேர்த்து தொகையை எடுத்துகொண்டேன். பணம் போட்டு 2,3 மாதங்களில் மேற்படி பணத்தை எடுத்துகொண்டேன். அந்த பணத்தை எதற்காக போட்டேன் என்றால் என் மீது எனது அப்பா உயில் எழுதி வைத்தார் அதற்காக பணம் கேட்டார். அந்த பணத்தை போட்டேன். வங்கியில் நடந்த வரவு செலவு கணக்கு பாஸ்புக் என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் பார்த்தால் தான் தெரியும். எனக்கு அந்த வங்கியில் கணக்கு எதுவும் இல்லை. எனக்கு பெரம்பலூரில் உள்ள கனரா வங்கியில் வங்கி கணக்கு உள்ளது.

2) மேற்படி கனரா வங்கியில் எடுத்து வந்து தான் எனது அப்பா வங்கி கணக்கில் போட்டேனா என்றால் இல்லை. என் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தேன். எனது அப்பா எழுதி வைத்த உயிலை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளதாக நினைக்கிறேன். (ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை). மேற்படி உயிலின் அடிப்படையில் தான் மேற்படி 6.93 ஏக்கர் எனக்கு வந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனது சித்தப்பா கந்தசாமி போட்டார். உடன் போட்ட மற்றவர் பெயர் ஞாபகம் இல்லை. எனது அப்பா எழுதிய அசல் உயில் எப்போது எனது கைக்கு

வந்தது என்றால் உடனே வந்தது. மேற்படி உயில் தலைவாசலில் வைத்து எழுதப்பட்டது நானும் அவருடன் சென்றேன்.

3) மேற்படி உயிலில் சொத்து மதிப்பு 6 லட்சம் என போட்டுள்ளார். 6.93 ஏக்கர் 6 லட்சம் தான் போகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் என் தாயார் கையெழுத்தை பார்த்தால் சொல்ல முடியுமா என்றால் என் அப்பா கையெழுத்து மாதிரி தெரியவில்லை. தாயார் கைரேகை எனக்கு தெரியாது. எனது சகோதரி பெயர் செல்வி. நானும் எனது சகோதரி தான் ராமசாமிக்கு மகள்கள் என்றால் சரிதான். எனக்கு முருகேசன் என்ற ஒரு சகோதரன் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறக்கும்போது அவருக்கு 30 வயது இருக்கும். அவர் திருமணம் ஆகி இறந்துவிட்டார். அய்யாவு எனது அப்பா வங்கி கணக்கில் தொகை போட்டாரா என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு ஒரே ஒரு வங்கி கணக்கு தான் இருந்தது என்றால் சரிதான். அம்மாவுக்கு வங்கி கணக்கு தலைவாசலில் தான் வங்கி கணக்கு இருந்தது. அதே வங்கியில் தான் இருந்தது. எனது அப்பா அம்மா உயிருடன் இருக்கும்போது மேற்படி சொத்தை எவ்வாறு பிரித்து கொள்ளலாம் என்று பேசினோமா என்றால் பேசவில்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.11.18 17:39:05 +0530

**Subordinate Judge, Attur.**